JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-1- Witness
for Prosecution

CC No. 114/2024 Crime No. 194/2023 Station Appakoodal

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw1 ஜெகதீசன்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 02.07.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பில் மனு அளிக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

ஆஜர் எதிரி எனக்கு எனது கொழுந்தியா ரஞ்சனி தேவி மூலம் தான் தெரியும் என்றால், சரிதான். நானும், எதிரியும் வேறு வேறு ஊரைச் சார்ந்தவர்கள் என்றால், சரிதான். எதிரி என்ன வேலை செய்து வருகிறார் என்பதை நான் தெரிந்து கொண்டேனா என்றால், அவர் ரியல் எஸ்டேட் வேலை செய்து கொண்டு வருகிறார். அவரது மனைவி அரசு பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறார். 11.10.2019 ம் தேதியில் எனது மனைவியின் வங்கிக் கணக்கிலிருந்து ஆஜர் எதிரியின் வங்கி கணக்கிற்கு ரூ.2,25,000/– பணம் அனுப்பினேன் என்றால், சரிதான். மீண்டும் 30.11.2019ம் தேதியன்று எனது மனைவியின் வங்கி கணக்கிலிருந்து ஆஜர் எதிரியின் வங்கி கணக்கிற்கு ரூ.2,50,000/– அனுப்பினேன் என்றால், சரிதான்.

மேலும் நான் ஆஜர் எதிரிக்கு பணம் ரூ.25,000/– கையில் ரொக்கமாக கொடுத்தேன் என்றால், சரிதான். நான் ரூ.25,000/– பணத்தை யாரை வைத்து கொடுத்தேன் என்றால், நான் தான் ஆஜர் எதிரிக்கு கொடுத்தேன். எனக்கும், ஆஜர் எதிரிக்கும் நடந்த பரிவர்த்தனை குறித்து ஆவணங்கள் நான் போலீஸ் விசாரணையின் போது கொடுத்தேனா என்றால், கொடுத்தேன். நான் பணம் கொடுப்பதற்கு முன்பு ஆஜர் எதிரி யாருக்காவது வேலை வாங்கி கொடுத்து உள்ளாரா என்பதை விசாரித்து நான் பணம் கொடுக்கவில்லை என்றால், சரிதான். ஆஜர் எதிரி வேறு யாருக்காவது வேலை வாங்கி கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி அரசியல் பிரமுகர் அல்லது அரசு அதிகாரி இல்லை என்றால், ஆஜர் எதிரி பாரதிய ஜனதா கட்சியின் விவசாயி அணியில் முக்கிய

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.02 17:29:31 +0530

பொறுப்பில் இருந்து வந்தார். நான் சொல்வது தவறு என்றாலும், ஆஜர் எதிரி எந்த ஒரு கட்சியிலும் இல்லை என்றாலும், அவர் ஒரு சாதாரண நிலப்பிரமுகர் என்றால், சரியல்ல. நானும், ரஞ்சனியும் இறுதியாக சென்று எதிரியிடம் பணம் கேட்ட விபரத்தை போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால், சரியல்ல கூறினேன்.

ஆஜர் எதிரிக்கும், எனக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதை யாராவது பார்த்தார்களா என்றால், யாரும் பார்க்கவில்லை. சம்பவமானது வீட்டுக்குள் தான் நடந்தது. ஆஜர் எதிரியின் வீட்டைச் சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால், சரிதான். ஆஜர் எதிரி எனது மகனுக்கு வேலை வாங்கி தருவதாக கூறித்தான் பணம் வாங்கினார் என்று நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் பணம் கொடுத்ததற்கு ஆதரவாக காசோலை மற்றும் கடனுறுதிச்சீட்டு எதுவும் வாங்கவில்லை என்றால், சரிதான். ஆஜர் எதிரி கடனாகத்தான் என்னிடம் ரூ.2,25,000/- பணம் வாங்கினார் என்றால், சரியல்ல. எதிரி கேட்டுக் கொண்டதற்காகத் தான் நான் எனது மனைவியின் கணக்கில் இருந்து அவரது வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பினேன் என்றால், சரியல்ல. மேற்படி ரூ.2,25,000/- பணத்திற்கு பின்னிட்டு நான் எந்த பணமும் ஆஜர் எதிரி வங்கி கணக்கிற்கு அனுப்பவில்லை என்றால், சரியல்ல. ஆஜர் எதிரிக்கு ரொக்கமாகவும் பணம் ரூ.25,000/- கொடுக்கவில்லை என்றால், சரியல்ல.

நான் கொடுத்த பணத்தை ஆஜர் எதிரி திருப்பி கொடுக்காததாலும், நான் அவரிடம் அதிக வட்டிக்கு பணம் கேட்டதாலும் அவர் எனக்கு பணம் தராததால் இந்த பொய் புகார் கொடுத்து பொய் புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் ஆஜர் எதிரியிடம் அடிக்கடி சென்று பணம் கேட்டு தொந்தரவு செய்ததால், அவர் என் மீது ஏதாவது புகார் கொடுத்து விடுவார் என்பதற்காக நான் எதிரி மீது வேலை வாங்கி தருவதாக கூறி பணம் வாங்கினார் என்று கூறியும், ஆஜர் எதிரியிடம் இருந்து பணம் வாங்க முடியாததால் எப்படியாவது கொடுத்த பணத்தையாவது பெற்றுவிடலாம் என்பதற்காகவும், எதிரியிடமிருந்து எந்த ஆவணமும் வாங்கி வைக்காததால் மற்றும் அவர் மீது வேறு எந்த உரிமையியல் வழக்கும் தொடர முடியாததால் நான் காவல் நிலையத்தில் வேலை வாங்கி தருவதாக கோரி பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல.

நான் புகார் கொடுத்து ஆஜர் எதிரியையும், என்னையும் அழைத்து விசாரித்த பின்னர்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால், சரிதான். நான் புகாரை முதலில் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்தேன். அங்கிருந்துதான் ஆப்பக்கூடல் காவல் நிலையத்திற்கு வந்தது. மேற்படி விசாரணையில் ஆஜர் எதிரி தான் வாங்கிய ரூ.2,25,000/- பணத்தை தர தயாராக இருந்தார் என்றாலும், நான் தான் ரூ.5,00,000/- பணம் வேண்டும் என்பதற்காக போலீசாரிடம் கூறி இந்த பொய் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால், சரியல்ல. காவல்துறையினர் உண்மை தெரிந்ததால் தான் நான் கொடுத்த புகாரை பதிவு செய்யாமல் இருந்தார்கள் என்றால், சரியல்ல. ஆஜர் எதிரியிடம் இருந்து அதிக பணம் வசூலிக்கப்பட வேண்டும் என்பதற்காக நான் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 30.11.2019 தேதியில் எனது மனைவி

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.02 17:29:42 +0530

வங்கிக் கணக்கில் இருந்து ஆஜர் எதிரியின் வங்கி கணக்கிற்கு ரூ.2,50,000/- அனுப்பவில்லை என்றால், நான் சொன்ன புகார் பொய் என்றால், சரியல்ல நான் அனுப்பினேன். நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.02 17:29:47 +0530

Sd/- (J.RAJKUMAR)

**Judicial Magistrate No.1, Bhavani**

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-2- Witness
for Prosecution

CC No. 114/2024 Crime No. 194/2023 Station Appakoodal

| Name | **Pw2-கலாவதி** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 02.07.2026 | | |

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பில் மனு அளிக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

ரஞ்சனி தேவி எனது உறவினர் என்றால், சரிதான். ஆஜர் எதிரி எனது மகனுக்கு வேலை வாங்கி தருவதாக சொன்ன சமயத்தில் நான் அவர்களுடன் எதிரி வீட்டிற்கு செல்லவில்லை என்றால், நாங்கள் எங்களது கொழுந்தனார் வீட்டிற்கு சென்றிருந்தோம். அங்கு ஆஜர் எதிரி வந்திருந்தார். ஆஜர் எதிரி என்ன வேலை செய்து வருகிறார் எவ்வளவு மாதம் சம்பாதிக்கிறார் என்கிற எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால், சரிதான். இறுதியாக ஆஜர் எதிரி ரூ.25,000/- பணம் வாங்கிய போது நான் அங்கு இல்லை என்றால், சரிதான். அவர் என்ன தேதியில் வேலை வாங்கி தருவதாக சொன்னார் என்கிற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான்.

ஆஜர் எதிரி கொலை மிரட்டல் விடுத்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். நான் சொல்வது போல், ஆஜர் எதிரி எனது மகனுக்கு வேலை வாங்கி தருவதாக சொன்னது பொய் என்றாலும், ஆஜர் எதிரி எனது கணவருக்கு தர வேண்டிய பணத்தை தராததால் தான் எனது கணவர் கேட்டுக் கொண்டதற்கு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.02 17:29:53 +0530

மறுவிசாரணை இல்லை

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.02 17:29:58 +0530

Sd/- (J.RAJKUMAR)

**Judicial Magistrate No.1, Bhavani**

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-3- Witness
for Prosecution

CC No. 114/2024 Crime No. 194/2023 Station Appakoodal

| | | |
|---|---|---|
| Name | **Pw3 ரஞ்சனி தேவி** | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 02.07.2026 | | |

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பில் மனு அளிக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

ஆஜர் எதிரி எனது பக்கத்து வீட்டுக்காரர் என்றால், சரிதான். ஜெகதீசன் எனக்கு என்ன உறவு முறை என்றால், எனக்கு அவர் மச்சாண்டார் ஆவார். பழனிச்சாமி என்ன வேலை செய்து வருகிறார் என்றால், நில புரோக்கராக பணியாற்றி வருகிறார். எதிரி எனது பக்கத்து வீட்டுக்காரர் என்பதாலும், அவர் நல்லவர் தான் என்றால், நல்லவர் போல் தான் இருந்தார். ஆஜர் எதிரி எப்போது வேலை வாங்கி தருவதாக என்ன தேதியில் எனக்கு சொன்னார் என்றால், தேதி ஞாபகம் இல்லை. ஜெகதீசன் பணம் அனுப்பியது எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரியல்ல. பணம் அனுப்பிய பின்பு ஆஜர் எதிரி வங்கி கணக்கில் பணம் வாங்கியதை என்னிடம் கூறுவார்.

ஆஜர் எதிரி என்னிடம் வாங்கிய ரூ.1,00,000/– கடனை திரும்ப செலுத்தி விட்டார் என்றால், சரிதான். என் மூலம் தான் ஆஜர் எதிரிக்கு ஜெகதீசன் தெரியும் என்றால், சரிதான். நான் சொல்வது போல், ஆஜர் எதிரி வேலை வாங்கி தருவதாக கூறி பணம் எதுவும் வாங்கவில்லை என்றாலும், என்னிடம் பணம் வாங்கியது போல் ஜெகதீஷ் என்பவரிடம் பணம்

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.02 17:30:03 +0530

வாங்கினார் என்றாலும், அதை திருப்பி செலுத்தாததால் தான் வேலை வாங்கி தருவதாக கூறி பொய் புகார் கொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.02 17:30:07 +0530

Sd/- (J.RAJKUMAR)

**Judicial Magistrate No.1, Bhavani**